# ரணவிரு சேவா அதிகாரசபை

## பாதுகாப்பு அமைச்சு

# ஒப்பந்த அடிப்படையில் வெற்றிடங்கள்

ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## முறைமைப் பகுப்பாய்வாளர் – 01

**01 தேவையான தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பத்தில் இளமாணி பட்டம் அத்துடன் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக அமைப்பு ஒன்றில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள்:**

முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பம்) பிரிவின் தரம் II இல் IT உதவியாளர் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை ஒன்றை பூர்த்தி செய்த பணியாளர்.

**02 தொழில் விபரம்:**

நிர்வாகத்தின் தரவுத் தொகுதி முறைமையை உருவாக்குதல், மேம்படுத்தல் மற்றும் பராமரித்தல்.

**03 ஒப்பந்த ஊதியம்**

JM-1-1 ரூபா 65,633/= + வாழ்க்கைச் செலவு

(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, இந்த சம்பள அளவு 2026.01.01 தொடக்கம் செயற்படுத்தப்படுகிறது)

**04 வயது:**

விண்ணப்ப இறுதித் திகதியில் குறைந்தது 22 வயது மற்றும் அதிகபட்சம் 45 வயதுடையவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**05 எழுத்துப் பரீட்சை:** பின்வரும் தொடர்புடைய பாடத்தில் எழுத்துப் பரீட்சைக்காக விண்ணப்பதாரர்கள் தோற்றுதல் வேண்டும்.

1. மொழித் தேர்ச்சி
2. திறனாய்வுப் பரீட்சை
3. பதவிக்குத் தொடர்புடைய விடய அறிவு.

**06 ஆட்சேர்ப்பு நடைமுறை**

பதவிக்கு மிகப் பொருத்தமான விண்ணப்பதாரர் விரிவான எழுத்துப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் முழு முடிவுகளுக்கு அமைய தேர்வு செய்யப்படுவார்.

## தகவல் தொழில்நுட்ப உதவியாளர் – 02

**01 தேவையான தகைமைகள்:**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட 4 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மூன்றாம் நிலைக் கல்விக்கு தேவையான செயல்திறன் மட்டத்தை அடைவதற்கு க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் பொதுப் பரீட்சை தவிர்த்து குறித்த எண்ணிக்கையான படங்களில் சித்தி பெற்றிருத்தல்.

தொழில்முறை தகைமை:

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட NVQ5 தரத்திற்கு குறையாத டிப்ளோமா அல்லது சான்றிதழ் கற்கை ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

**02 தொழில் விபரம்:**

தரவுத் தொகுதி முறைமை மற்றும் பயன்பாட்டு மென்பொருள் தொடர்பான பணிகளைப் பராமரித்து மேற்கொள்ளுதல்.

**03 ஒப்பந்த ஊதியம்**

MA-2-1 ரூபா 46,960/= + வாழ்க்கைச் செலவு

(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, இந்த சம்பள அளவு 2026.01.01 தொடக்கம் செயற்படுத்தப்படுகிறது)

**04 வயது:**

விண்ணப்ப இறுதித் திகதியில் விண்ணப்பதாரர் 18 வயதுக்கு குறைந்தவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**05 எழுத்துப் பரீட்சை:** பின்வரும் தொடர்புடைய பாடத்தில் எழுத்துப் பரீட்சைக்காக விண்ணப்பதாரர்கள் தோற்றுதல் வேண்டும்.

1. மொழித் தேர்ச்சி
2. திறனாய்வுப் பரீட்சை
3. பதவிக்குத் தொடர்புடைய விடய அறிவு.

**06 ஆட்சேர்ப்பு நடைமுறை**

பதவிக்கு மிகப் பொருத்தமான விண்ணப்பதாரர் விரிவான எழுத்துப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் முழு முடிவுகளுக்கு அமைய தேர்வு செய்யப்படுவார்.

அனைத்து விண்ணப்பதாரர்களும்:

இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்

நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு சிறந்த உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

அனைத்து பதவிகளுக்குமான பண்பு:-

இந்த நியமனம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:- மேலுள்ள பதவிகளுக்கு தேவையான தகைமைகளைப் பெற்றிருக்கும் விண்ணப்பதாரர்கள் இரு உறவினர் அல்லாத நடுவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்களுடன் சேர்த்து, முழுமையான தனிப்பட்ட விபரங்கள் அடங்கிய விரிவான சுயவிபரக் கோவை (CV), கல்வி மற்றும் தொழில்முறை தகைமைகள், தொழில் வரலாறு, மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்களுடன் சேர்த்து அனைத்து தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளை 2026.09.24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

அரச/ அரச சார்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் அனைத்து விண்ணப்பங்களும் குறித்த திணைக்கள தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பத்தைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்**
**ரணவிரு சேவா அதிகாரசபை**
**இல. 449, காலி வீதி,**
**கொழும்பு 03.**

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED